# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය
## අති විශෙෂ
# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை
## அதி விசேஷமானது

අංක 12,794 — 1961 දෙසැම්බර් 4 වැනි සඳුද — 4.12.1961

12,794 ம் இலக்கம்—1961 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 4 ந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## விலைக் கட்டளைகள்

விலைக்கட்டளை இல. வி. 71. உப உணவுப்பொருட்கள்.

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவை அச்சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்குமிடத்து எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு வவுனியா மாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) பரமநாதன் செல்வரத்தினமாகிய நான் இத்தக்கட்டளையால் :—

(1) 1961 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24 ம் திகதி வெளிவந்த 12,730 ம் இலக்க இலங்கை அரசாங்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட வி. 70 இலக்க விலைக்கட்டளையை இத்திகதியிலிருந்து எடுத்துவிடுகிறேன்.

(2) 1950 ம் ஆண்டு 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்படி இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் அட்டவணையின் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள புளி, மாசுக் கருவாடு அல்லது பொனிற்றோக் கருவாடு கொழும்பு முனிசிப்பல் எல்லைக்குள் நியமிக்கப்பட்டுள்ள மொத்த வியாபாரியின் ஒரு மொத்த அந்தரின் ஆகக் கூடுதலான மொத்த விலையோடும் நிகர இருத்தல் ஒன்றைச் சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையோடும் இத்துடன் அணைக்கப்பட்டிருக்கும் 2 ம், 3ம் பத்தியில் குறிக்கப்பட்டிருக்கின்ற தொகையைக் கூட்டி முறையே மொத்த அந்தர் ஒன்றின் மொத்த விலையாகவும், நிகர இருத்தல் ஒன்றின் சில்லறை விலையாகவும், உடனடியாகவே நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்டுள்ள பொருட்களை இந்த விலைகளுக்குள் கூடுதலாக வவுனியா மாவட்ட அதிகாரியின் எல்லைக்குள் விற்கலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன்.

(3) இக்கட்டளையின் நோக்கத்துக்காக—

(அ) ஒரு அந்தர் அல்லது அதற்கு மேலதிகமாக குறித்த அட்டவணையின் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள பொருட்களை விற்பதற்கோ அல்லது திருப்பி விற்பதற்கோ விற்றல் மொத்தவிற்பனையாவே கருதப்படும் என்று ஆஞ்ஞையிடுகிறேன்.

(ஆ) ஒரு அந்தருக்குக் குறைய குறித்த அட்டவணையின் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள பொருட்களை விற்பதற்கோ அல்லது திருப்பி விற்பதற்கோ விற்றல் நிகர விற்பனையாகவே கருதப்படும் என்று ஆஞ்ஞையிடுகிறேன்.

(4) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் நிர்ணயிக்கப்பட்ட எல்லைகளுக்குள் இதனோடிருக்கும் அட்டவணையில் 1 ம் பந்தியில் குறிக்கப்பட்டிருக்கும் பொருளை வேறொரு பொருளோடு கலந்து விற்கலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன்.

(5) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு பகுதியிலிருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் தன்னிடமோ அல்லது தன் பொறுப்பில் வேறு இடத்திலோ அல்லது வாகனத்திலோ இதனோடிருக்கும் அட்டவணையில் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள பொருட்கள் இருப்பின் அவற்றின் ஆகக்கூடிய விலைகளைக்காட்டும் அறிவித்தல் ஒன்றை அவ்விடத்தல் அல்லது அவ்வாகனத்தில் பகிரங்கமாக பார்வைக்கு வைத்தல் வேண்டும்.

(6) இக்கட்டளையின் நோக்கத்துக்காக " இருத்தல் " அல்லது " இரு " என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் முறையாகக் கருதப்படும் என்றும் ஆஞ்ஞையிடுகிறேன்.

(7) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் நிர்ணயிக்கப்பட்ட ஒவ்வொரு பகுதியினும் இதனோடிருக்கும் அட்டவணையில் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்ட பொருட்களை மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும், சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும், அப்பொருட்களை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச்சீட்டு ஒன்றைக்கொடுத்தல் வேண்டுமென்று ஆஞ்ஞையிடுகிறேன்.

(அ) விற்பனை நடந்த திகதி
(ஆ) விற்பனைசெய்த பொருளின் தொகை (நிறையில்)
(இ) விற்பனைசெய்த தொகைக்குக் கொடுக்கப்பட்ட விலை
(ஈ) எவ்விதமான விலை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது
(உ) இக்கட்டளையால் குறிக்கப்பட்ட பொருட்கள் விற்குமிடத்து குறித்த அட்டவணையில் (2), (3) ம் பந்திகளிற் குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அல்லாது விற்கப்படும் பொருளை அதைச் சுற்றிக் கொடுக்கும் உறை அல்லது அதை வைத்திருக்கக் கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1961 ம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ம் திகதி காலை 10 மணிக்கு வவுனியாக் கச்சேரியில் கையொப்பம் இடப்பட்டது.

ப. செல்வரத்தினம்,
உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
வவுனியா மாவட்டம்.

அட்டவணை

| 1 ம் பத்தி விபரம் | 2 ம் பத்தி மொத்த அந்தர் ஒன்றுக்கு கொழும்பு முன்சிப்பல் எல்லைக்குள் நியமிக்கப்பட்ட ஆகக்கூடுதலான மொத்த விலையுடன் கூட்ட வேண்டிய தொகை | 3 ம் பத்தி நிகர றுத்தல் ஒன்றுக்கு கொழும்பு எல்லைக்குள் நியமிக்கப்பட்ட ஆகக்கூடிய சில்லறை விலையுடன் கூட்டவேண்டிய தொகை |
|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. |
| புளி | 2.71 | 0.03 |
| மாசுக்கருவாடு அல்லது பொனிற்றோ கருவாடு | 3.71 | 0.04 |

குறிப்பு.—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல. இவை ஆகக்கூடிய விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக இப்பொருட்களை விற்கலாகாது.

12-271.

---

உணவு விலைக்கட்டளை இல. பிரி. 12/61.

உப உணவுப் பொருட்கள்
(மாசிக்கருவாடு அல்லது பொனிற்றோ கருவாடு).

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச்சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவினுல் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு மட்டக்களப்பு உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) ஜோன் வின்சென்ற் ஞானப்பிரகாசம் ஆகிய நான் இக்கட்டளையால் :—

(1) 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தினுல் கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் மொத்த வியாபாரி ஒருவர் மொத்த அந்தர் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய மொத்த விலையாக விதிக்கப்பட்ட விலையுடன் இதனேடிருக்கும் இரண்டாம் அட்டவணையில் 2 ம், 3 ம் பத்திகளில் உள்ள விலைகளுடன் கூட்டிவரும் விலையை, மொத்த அந்தர் ஒன்றை மொத்த வியாபாரி ஒருவர் விற்கும் ஆகக்கூடிய மொத்த விலையாகவும், முதலாம் அட்டவணையில் உள்ள 1 ம், 2 ம் பகுதிகளில் விபரித்துள்ள இடங்களில், இரண்டாம் அட்டவணையில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்டுள்ள மாசிக்கருவாட்டை அல்லது பொனிற்றோ கருவாட்டை இவ் விலைகளுக்குக் கூடுதலாக விற்கக்கூடாதெனவும் உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன்.

(2) 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தினுல் கொழும்பு மாநகரசபை எல்லைக்குள், சில்லறை வியாபாரி ஒருவர் நிகர இருத்தல் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாக விதிக்கப்பட்ட விலையுடன் இதனேடிருக்கும் இரண்டாம் அட்டவணையில் 4 ம், 5 ம் பத்திகளில் உள்ள விலைகளுடன் கூட்டிவரும் விலையை நிகர இருத்தல் ஒன்றை சில்லறை வியாபாரி ஒருவர் விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும், முதலாம் அட்டவணையில் உள்ள 3 ம், 4 ம் பத்திகளில் விபரித்துள்ள இடங்களில், இரண்டாம் அட்டவணையில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்டுள்ள மாசிக்கருவாட்டை அல்லது பொனிற்றோ கருவாட்டை இவ் விலைகளுக்குக் கூடுதலாக விற்கக்கூடாதெனவும் உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன்.

(3) இக்கட்டளையின் நோக்கத்துக்காக—

(அ) இரண்டாம் அட்டவணையின் 1 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள மாசிக்கருவாட்டையோ அல்லது பொனின்றோ கருவாட்டையோ திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது ஒரு மொத்த அந்தரையோ அதற்குக் கூடுதலான தொகையையோ ஒரே முறையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படும் என்றும் ஆஞ்ஞையிடுகிறேன்.

(ஆ) இரண்டாம் அட்டவணையில் 1 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள எத்தொகையான மாசிக்கருவாட்டையோ அல்லது பொனிற்றோ கருவாட்டையோ ஒரு மொத்த அந்தருக்குக் குறைவான தொகையில் உபயோகத்திற்காக அல்லது பாவனைக்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படும் என்றும் ஆஞ்ஞையிடுகிறேன்.

(4) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பினும் மாசிக்கருவாட்டை அல்லது பொனிற்றோ கருவாட்டை வேறொரு பொருளுடன் சேர்த்து விற்றலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன்.

(5) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், மாசிக்கருவாட்டை அல்லது பொனிற்றோ கருவாட்டை விற்கும் ஒவ்வொரு வியாபாரியும் தம் வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் குறித்த இரண்டாம் அட்டவணையில் 1 ம் பத்தியில் விபரித்துள்ள மாசிக்கருவாட்டுக்கு அவ்விடப்பரப்பில் இக்கட்டளையால் விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளைக்காட்டும் அறிவித்தல் ஒன்று பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டும் என ஆஞ்ஞையிடுகிறேன்.

(6) இக்கட்டளையின் நோக்கத்துக்காக இருத்தல் அல்லது "இரு" என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் முறையாக கருதப்படும் என ஆஞ்ஞையிடுகிறேன்.

(7) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் மாசிக்கருவாட்டை அல்லது பொனிற்றோ கருவாட்டை மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும், சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டு பற்றுச்சீட்டு ஒன்றைக் கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(அ) விற்பனை நடந்த திகதி,
(ஆ) விற்பனை செய்யப்பட்ட மாசிக்கருவாட்டின் அல்லது பொனிற்றோ கருவாட்டின் தொகை (நிறையில்),
(இ) விற்பனை செய்யப்பட்ட தொகைக்குக் கொடுக்கப்பட்ட விலையும்,
(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது.

(8) இரண்டாம் அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட மாசிக்கருவாடு அல்லது பொனிற்றோ கருவாடு விற்கப்படுமிடத்து, குறிப்பிட்ட அட்டவணையின் 2 ம், 3 ம் 4 ம் 5 ம் பத்திகளில் குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக்கொடுக்கும் உறை அல்லது கொள்கலம் ஏதாவது உபயோகப்படின் அதன் விலையும் அடங்க வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1961 ம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ந் திகதி 3 மணிக்கு மட்டக்களப்புக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

ஜே. வீ. ஞானப்பிரகாசம்,
உதவி விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு),
மட்டக்களப்பு மாவட்டம்.

## முதலாம் அட்டவணை

| 1 ஆவது பகுதிக்குள் அடங்கிய இடங்கள் | 2 ஆவது பகுதிக்குள் அடங்கிய இடங்கள் | 3 ஆவது பகுதிக்குள் அடங்கிய இடங்கள் | 4 ஆவது பகுதிக்குள் அடங்கிய இடங்கள் |
|---|---|---|---|
| கோறளை வடக்கும் மத்தியதும் தெற்கும் ஆகிய கிராமச் சங்கத்து எல்லைகளைத் தவிர்த்து, மண்முனை வட, தென் கிழக்கு, எருவில் போரதீவு, எருவூர், கோறளைப்பற்றுப் பிரிவுக் காரியாதிகாரியின் பிரிவுகளில் | கோறளைப்பற்றுக்குச் சேர்ந்த கோறளை வடக்கு, மத்திய தெற்குக் கிராமச் சங்க எல்லைக்குள் | மண்முனை வடமேற்கு கிராமச் சங்கத்து எல்லை தவிர்த்து மண்முனை வட பிரிவுக்காரியாதிகாரியின் பிரிவுகளில் | மண்முனை வடமேற்கு கிராமச் சங்கத்து எல்லையும், மண்முனை தென்கிழக்கும், எருவில் போரதீவு, எருவூர், கோறளை ஆகிய பிரிவுக் காரியாதிகாரியின் பிரிவுகளில் |

## இரண்டாம் அட்டவணை

| பத்தி 1 | பகுதி இல. 1<br>பத்தி 2 | பகுதி இல. 2<br>பத்தி 3 | பகுதி இல. 3<br>பத்தி 4 | பகுதி இல. 4<br>பத்தி 5 |
|---|---|---|---|---|
| பொருட்களின் விபரம் | கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் விதிக்கப்பட்ட மொத்த வியாபாரியின் ஆகக்கூடிய மொத்த விலையுடன் கூட்டவேண்டிய விலை | கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் விதிக்கப்பட்ட மொத்த வியாபாரியின் ஆகக்கூடிய மொத்த விலையுடன் கூட்டவேண்டிய விலை | கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் விதிக்கப்பட்ட சில்லறை வியாபாரியின் ஆகக்கூடிய சில்லறை விலையுடன் கூட்டவேண்டிய விலை | கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் விதிக்கப்பட்ட சில்லறை வியாபாரியின் ஆகக்கூடிய சில்லறை விலையுடன் கூட்டவேண்டிய விலை |
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| மாசிக்கருவாடு அல்லது பொனிற்றோ கருவாடு .. | 5 50 .. | 5 90 .. | 0 06 .. | 0 07 |

**குறிப்பு**.—இவ்விலைகள் மேற்கூறிய பொருட்களை விற்க வேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல; இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக இப்பொருட்களை விற்றலாகாது.

12-285.

---

உணவு விலைக்கட்டளை இல. எம். என்/1961/10.

**உப உணவுப் பொருட்கள் (பொனிற்றோ கருவாடு அல்லது மாசிக்கருவாடு).**

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் வாசிக்கப்பட்ட 4 ம் பிரிவுடன் உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரிக்கு (உணவு) அளிக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு மன்னார் மாவட்ட உப உணவுக்கட்டுப்பாட்டதிகாரி, சண்முகம் பரமநாதன் ஆகிய நான் இக்கட்டளையால்—

(2) 1950 ம் ஆண்டு 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின்படி இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் 2 ம் அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்டுள்ள பொருட்களுக்கு, கொழும்பு முனிசிப்பல் எல்லைக்குள் நியமிக்கப்பட்டுள்ள மொத்த வியாபாரியின் ஒரு மொத்த அந்தரின் ஆகக்கூடிய மொத்த விலையோடு இத்துடன் இணைக்கப்பட்டிருக்கின்ற 2 ம் அட்டவணையில் 2 ம், 4 ம், 6 ம் பத்தியில் குறிக்கப்பட்டிருக்கின்ற தொகையைக் கூட்டி முறையே மொத்த அந்தர் ஒன்றின் மொத்த விலையாக உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கின்றேன். 2 ம் அட்டவணையில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருளை இந்த விலைக்கு கூடுதலாக மன்னார் நிர்வாக மாவட்ட எல்லைக்குள் விற்றலாகாது.

(3) 1950 ம் ஆண்டு 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டின் சட்டத்தின் இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் 2 ம் அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்டுள்ள பொருட்களுக்குக் கொழும்பு முனிசிப்பல் எல்லைக்குள் நியமிக்கப்பட்டுள்ள ஒரு நிகர இறுத்தலின் சில்லறை வியாபார விலையோடு இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் 2 ம் அட்டவணையில் 3 ம், 5 ம், 7 ம் பத்தியில் குறிக்கப்பட்டிருக்கின்ற தொகையைக் கூட்டி நிகர இறுத்தல் ஒன்றின் சில்லறை விலையாகவும் உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கின்றேன்.

(4) இக்கட்டளையின் நோக்கத்திற்காக—

(அ) 2 ம் அட்டவணையில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் எத்தொகையையாவது திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது 2 ம் அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளை ஒரு மொத்த அந்தர் தொகையில் அல்லது அதிற் கூடிய தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகக் கருதப்படுமென்றும்;

(ஆ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் மொத்த அந்தர் ஒன்றிற்குக் குறைந்த எத்தொகையையாவது பாவிப்புக்கு அல்லது உபயோகத்திற்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகின்றேன் ;

(இ) 2 ம் அட்டவணையில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்டுள்ள பொருள் எல்லாவற்றையும் அல்லது சிலவற்றை மொத்த ஒரு அந்தர் அல்லது அதற்கு மேற்பட ஒரு முறையில் விற்பவர் " மொத்த வியாபாரி " எனக்கருதப்படுவர் ;

(ஈ) ஆகக்கூடிய சில்லறை விலை, எல்லாச் சில்லறை விற்பனைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

(5) 2 ம் அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் வேறொரு பொருளோடு கலந்து எவராவது இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்ட எந்த ஒரு இடத்திலும் விற்றலாகாது என இத்தால் ஆஞ்ஞையிடுகின்றேன்.

(6) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலை விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இப்பரப்பினும் எப்பொருளையேனும் தம்வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது எவ்வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் ஒரு கொள்கலத்தில் குறிப்பிட்ட பொருளில் சிறு தொகையையும் இக்கட்டளையால் அப்பொருளுக்கு விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலை ஒரு அங்குல உயரத்திற்குக் குறையாத எண்களில் விலை அட்டைகளில் அல்லது பலகைகளில் எழுதி அப்பொருளையும் ஆகக்கூடிய விலையையும் வாங்குபவரால் நன்றாகப் பார்க்கக் கூடியவாறு அக்கொள்கலத்தில் இணைத்துப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(7) இக்கட்டளையின் நோக்கத்திற்காக " இறுத்தல் " " இறு " அல்லது " று " என்பது " அவோடுபோஸ் " எடுத்தலளவை முறையில் பிரமாண இறுத்தல் நிறையாகக் கருதப்படுமென்று ஆஞ்ஞையிடுகிறேன்.

(8) இக்கட்டளையால் ஆக்கக்கூடிய விலை விதிக்கப்பட்டுள்ள எந்த ஒரு இடத்திலும் 2 ம் அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருளை மொத்தமாக அல்லது சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும், அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டு பற்றுச்சீட்டொன்று கொடுத்தல் வேண்டுமென இத்தால் ஆஞ்ஞையிடுகிறேன்—

(அ) விற்பனை நடந்த திகதி
(ஆ) விற்கப்பட்ட பொருளின் அளவு (நிறையில்)
(இ) விற்ற பொருளுக்குக் கொடுக்கப்பட்ட விலை
(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது.

(9) 2 ம் அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்டுள்ள ஏதாவதொரு பொருளை விற்குமிடத்து, 2 ம் அட்டவணையின் 2, 3, 4, 5, 6, 7 ம் பத்திகளில் குறிப்பிட்டுள்ள ஆக்கக்கூடிய விலையில் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக்கொடுக்கப்படும் உறை அல்லது வைத்துக் கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்கவேண்டுமென இத்தால் ஆஞ்ஞையிடுகின்றேன்.

1961 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 30 ம் திகதி பிற்பகல் 3 மணிக்கு மன்னாரில் கையொப்பமிடப்பட்டது.

ச. பரமநாதன்,
உப உணவுக்கட்டுப்பாட்டதிகாரி,
மன்னார் மாவட்டம்.

முதலாம் அட்டவணை

| விஸ்தீரண எல்லை அடங்கிய இடங்கள் பத்தி 1 | விஸ்தீரண எல்லை அடங்கிய இடங்கள் பத்தி 2 | விஸ்தீரண எல்லை அடங்கிய இடங்கள் பத்தி 3 |
|---|---|---|
| மன்னார் பட்டின சங்கப் பகுதி கிராமச் சங்கப் பகுதிகள், மன்னார் கிழக்கு, மன்னார் மேற்கு (தலைமன்னார் கி. வி. பிரிவைத்தவிர) எருக்கலம்பிட்டி, வங்காலை, மாந்தை தெற்கு, நாநாட்டான் கிழக்கு, நாநாட்டான் மேற்கு | மன்னார் மேற்கு (தலைமன்னார் கி. வி. பிரிவு) (மாந்தை வடக்கு பெருங்களிப்பத்து பெரியமடு கொலனியைத் தவிர) முசலி வடக்கு, முசலி தெற்கு (மறிச்சுக்கட்டி கி. வி. பிரிவைத் தவிர) | பெருங்களிப்பத்து (பெரியமடு கொலனி இலுப்பைக்கடவை), முசலி தெற்கு (மறிச்சுக் கட்டி கி. வி. பிரிவு) பனங்காமம் மேற்கு மூலை |

இரண்டாம் அட்டவணை

| | விஸ்தீரணம் 1 | | விஸ்தீரணம் 2 | | விஸ்தீரணம் 3 | |
|---|---|---|---|---|---|---|
| பத்தி 1 | பத்தி 2 | பத்தி 3 | பத்தி 4 | பத்தி 5 | பத்தி 6 | பத்தி 7 |
| பொருளின் விபரம் | கொழும்பு முனிசிப்பல் எல்லைக்குள் நியமிக்கப்பட்டுள்ள மொத்த வியாபாரியின் ஒரு மொத்த அந்தரின் ஆகக் கூடிய விலையுடன் கூட்டப்படவேண்டிய தொகை | கொழும்பு முனிசிப்பல் எல்லைக்குள் நியமிக்கப்பட்டுள்ள சில்லறை வியாபாரியின் ஒரு நிகர இருத்தலின் ஆகக் கூடிய சில்லறை விலையுடன் கூட்டப் பட வேண்டிய தொகை | கொழும்பு முனிசிப்பல் எல்லைக்குள் நியமிக்கப்பட்டுள்ள மொத்த வியாபாரியின் ஒரு மொத்த அந்தரின் ஆகக் கூடிய விலையுடன் கூட்டப்படவேண்டிய தொகை | கொழும்பு முனிசிப்பல் எல்லைக்குள் நியமிக்கப்பட்டுள்ள சில்லறை வியாபாரியின் ஒரு நிகர இருத்தலின் ஆகக் கூடிய சில்லறை விலையுடன் கூட்டப் படவேண்டிய தொகை | கொழும்பு முனிசிப்பல் எல்லைக்குள் நியமிக்கப்பட்டுள்ள மொத்த வியாபாரியின் ஒரு மொத்த அந்தரின் ஆகக் கூடிய விலையுடன் கூட்டப்படவேண்டிய தொகை | கொழும்பு முனிசிப்பல் எல்லைக்குள் நியமிக்கப்பட்டுள்ள சில்லறை வியாபாரியின் ஒரு நிகர இருத்தலின் ஆகக் கூடிய விலையுடன் கூட்டப்படவேண்டிய தொகை |
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| பொனிற்றோ கருவாடு அல்லது மாசிக்கருவாடு | 4 25 | 0 4 | 4 40 | 0 4 | 4 50 | 0 04 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருளை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல, இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைக்கு மேலாக அப்பொருளை விற்றலாகாது.

12–388.

---

உணவு விலைக்கட்டளை இலக்கம் : 336.

**சீனி (பழுப்பும் வெள்ளையும்)**

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினால் விலைக்கட்டுப்பாட்டதிகாரிக்கு (உணவு) அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு றெஜினோல்ட் லோறன்ஸ் ஆர்னோல்ட், விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) ஆகிய யான் இக்கட்டளையால் :—

(1) 1961 ம் ஆண்டு ஜூலை மாதம் 28 ந் திகதி வெளிவந்த 12,563 ம் இலக்க இலங்கை அதிவிசேஷ வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 28.7.61 ம் திகதியைக்கொண்ட சி. 322 ம் இலக்க உணவு விலைக்கட்டளையை இத்திகதியிலிருந்து எடுத்து விடுகிறேன் ;

(2) இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம் 3 ம் பத்தியில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே மொத்த அந்தர் ஒன்றின் ஆகக் கூடிய மொத்த விலையாகவும், நிகர் இருத்தல் ஒன்றின் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும் விதிக்கிறேன். குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் நேரொத்த பதிவில் விபரிக்கப்பட்ட சீனியை இந்த விலைக்குக்கூடுதலாக கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் விற்றலாகாது ;

(3) இக்கட்டளையின் நோக்கத்துக்காக.—

(அ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எத்தொகையான சீனியையும் திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்டுள்ள சீனியை ஒரு மொத்த அந்தரைக் கொண்ட தொகையில் அல்லது அதிற்கூடிய தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படுமென்றும் ;

(ஆ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்டுள்ள சீனியை ஒரு மொத்த அந்தருக்குக் குறைந்த எத்தொகையை யாவது பாவிப்புக்காக அல்லது உபயோகத்துக்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படுமென்றும் ;

(இ) சீனியெனக் குறிப்பிட்டுள்ளது எல்லாவித பனங்கட்டியும் தவிர்ந்தது எனவும் ஆஞ்ஞையிடுகிறேன்.

(4) இக்கட்டளையால் ஆக்கக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்புபினும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட சீனியை வேறெரு பொருளோடு கலந்து விற்றலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன் ;

(5) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்டுள்ள சீனியை தம் வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது அல்லது வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில், அவ்வாகனத்தில் தகுந்த ஒரு கொள்கலத்தில் குறிப்பிட்ட சீனியில் சிறுதொகையையும், இக்கட்டளையால் சீனிக்கு விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகள் ஒரு அங்குல உயரத்துக்குக் குறையாத எண்களில் விலை அட்டைகளில் அல்லது பலகைகளில் எழுதி சீனியையும் ஆகக்கூடிய விலையையும் வாங்குபவர்கள் நன்ருக பார்க்கக் கூடியவாறு அக்கொள்கலத்தில் இணைத்து பகிரங்கமாக பார்வைக்கு வைத்தல்வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(6) இக்கட்டளையின் நோக்கத்துக்காக "இருத்தல்" அல்லது "இரு" என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன் ;

(7) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்டுள்ள சீனியை மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்டுள்ள சீனியை சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் சீனி வாங்குவோர் கேட்குமிடத்து அன்னருக்குப் பின்வருவனவற்றை குறிப்பிட்டு பற்றுச்சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(அ) விற்பனை நடந்த திகதி ;
(ஆ) விற்ற சீனியின் தொகையும் வகையும் (நிறையில்) ;
(இ) விற்ற சீனிக்குக் கொடுக்கப்பட்ட விலை ;
(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது சில்லறை விற்பனையா அல்லது மொத்த விற்பனையா என்பது.

(8) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட சீனி விற்கப்படுமிடத்து அட்டவணையின் 2 ம் 3 ம் பத்திகளில் குறிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்பட்ட சீனியை சுற்றிக்கொடுக்கும் உறை அல்லது வைத்துக்கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகப்படின் அதன் விலையும் அடங்க வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

1961 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 4 ந் திகதி திங்கட்கிழமை காலை ஒன்பது மணிக்கு கொழும்பில் கையொப்பமிடப்பட்டது.

ஆர். எல். ஆர்னோல்டா,
விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு).

**அட்டவணை**

| பத்தி 1<br>விபரம் | பத்தி 2<br>மொத்த வியாபாரியின் ஆகக் கூடிய மொத்த அந்தர் ஒன்றின் மொத்த விலை | பத்தி 3<br>சில்லறை வியாபாரியின் ஆகக்கூடிய நிகர இருத்தல் ஒன்றின் சில்லறை விலை |
|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. |
| பழுப்புச்சீனி .. .. .. .. | 58 33 .. | 0 55 |
| வெள்ளைச்சீனி .. .. .. .. | 65 53 .. | 0 62 |

**குறிப்பு**.—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல. இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருட்களை விற்றலாகாது.

12-495.

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனல் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.